**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.320/2013** **தேதி.**24.03.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 24.03.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திருமதி.லட்சுமி |
| க/பெ. | திரு.தர்மன் |
| வயது | 55/2026 |

துவக்க நேரம் 12.15 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை, கையெழுத்து மட்டும் போடுவேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்கிறேன்.

2. கடந்த 2008 ல் நான் என்ன வேலை செய்துவந்தேன் என்றால் மாடு வைத்து பிழைப்பு நடத்திவந்தேன். எனது கணவர் என்ன வேலை செய்துவந்தார் என்றால் கூலி வேலை செய்துவந்தார். கடந்த 2008 ல் எனக்கும், எனது கணவருக்கும் மாத வருமானம் எவ்வளவு வருகிறது என்றால் தெரியாது, தோராயமாக மாத வருமானம் எங்கள் இருவருக்கும் எவ்வளவு வந்தது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரே ஒரு பெண் உள்ளார்.

3. எனது மகளுக்கு எப்பொழுது திருமணம் செய்துவைத்தேன் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து கடந்த 23.06.2008 அன்று எனது தாயார் எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் ஆமாம், எழுதிக்கொடுத்தார். தாவா சொத்தை நான், விற்பனை செய்வதாக தெரிவித்து அத்தகவல் தெரிந்துதான் வாதி என்னிடம் வந்து விலைபேசினார் என்றால் இல்லவே இல்லை.

4. நானும் வாதியும் சேர்ந்து தாவா சொத்திற்கு ரூ.1,10,000/–க்கு விலைபேசி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல, நான் சொல்லவில்லை. யார், யார், எப்பொழுது, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் நானும், எனது கணவரும், கலாவதியும் அவரது கணவரும் மதியான வேளையில் சென்றோம்.

5. எத்தனை மணிக்கு கிரைய உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியவில்லை. மாலை 3.00 மணி, 4.00 மணி, 5.00 மணி எந்த நேரத்தில் பதிவுசெய்யப்பட்டது என்றால் தெரியவில்லை. கிரைய உடன்படிக்கை பத்திரத்தை கலாவதிதான் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். கிரைய உடன்படிக்கையை தயார் செய்த தேவேந்திரன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது.

6. கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திய அன்று ரூ.1,00,000/– பணம் வாங்கினேனா என்றால் ஆமாம் வாங்கினேன், அந்த பணம் காட்பாடி சார்பதிவாளர் அலுவத்தில் வாங்கினேன் என்றால் ஆமாம். இந்த கிரைய உடன்படிக்கையில் எனது கணவர் முதலாவது சாட்சியாய கையெழுத்துபோட்டார் என்றால் ஆமாம், நானும் போட்டேன். இன்னொரு சாட்சியாக கலாவதியின் கணவர் கையெழுத்துபோட்டுள்ளார் என்றால் தெரியவில்லை.

7. கிரைய உடன்படிக்கை பதிவுசெய்யப்பட்டபிறகு, கிரைய உடன்படிக்கையில் ஒரு Xerox copy ஐ எனக்கு கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. இந்த கிரைய உடன்படிக்கையை தவிர்த்து வேறு எங்காவது கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. கிரைய உடன்படிக்கையின் வாசம்படி, நான் ரூ.1,00,000/– வாங்கியபிறகு ரூ.10,000/–யை பெற்றுக்கொண்டு கிரையம் செய்துகொடுப்பதாக வாசகம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

8. பத்திரபதிவின்பொழுது, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு, எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தையும் எடுத்துச்சென்றேன் என்றால் ஆமாம், அந்த பத்திரத்தை கொடுத்துவிட்டுத்தான் பணம் வாங்கினேன். நான், சொல்வது தவறு என்றாலும் பத்திரபதின்பொழுது நான் அந்த பத்திரத்தை எடுத்துச்செல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. கிரைய உடன்படிக்கை செய்துகொண்டபிறகு, வாதி ரூ.10,000/– யை எடுத்துவந்து என்னை கிரையம் செய்துகொடுக்க பலமுறை நேரில் அணுகி கேட்டார் என்றால் சரியல்ல. கடந்த 27.01.2010 அன்று வாதி எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். அந்த அறிவிப்பில் ரூ.10,000/–யை பெற்றுக்கொண்டு கிரையம் செய்துகொடுக்கவேண்டும் என்றும் எங்கே வரவேண்டும், எப்பொழுது வரவேண்டும் என்ற விவரத்தையும் அந்த அறிவிப்பில் வாதி, சொல்லிதான் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றாலும் எனக்கு தெரியாது.

10. வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான், பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபிறகும், வாதி ரூ.10,000/–டன் என்னை அணுகி கிரையம் செய்துகொடுக்க கேட்டார் என்றால் சரியல்ல. வாதி என்னை வந்து பார்க்கவில்லை. நான், காலஅவகாசம் கேட்டதால் வாதி பொருமையாக இருந்தார் என்றாலும் அதன்பிறகும் நான் காலம் கடத்தவும் கடந்த 22.10.2012 அன்று ஒரு சட்ட அறிவிப்பை வாதி எனக்கு அனுப்பினார் என்றாலும் இந்த அறிவிப்பையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றாலும் நான் வாங்கவில்லை, வாதி என்னை வந்து பார்க்கவுமில்லை.

11. என்னிடம் காட்டப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் (**வா.த.சா.ஆ.6**) நான் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்காக கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் வாங்கியிருப்பேன். இந்த சட்ட அறிவிப்பிலும் ரூ.10,000/–யை பெற்றுக்கொண்டு கிரையம் செய்துகொடுக்கவேண்டும் என்றும் எங்கே வரவேண்டும், எப்பொழுது வரவேண்டும் என்ற விவரத்தையும் இந்த அறிவிப்பில் வாதி,

சொல்லிதான் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றாலும் எனக்கு தெரியாது. இந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

12. நான் வாதியிடம், வழக்கு எதுவும் தாக்கல் செய்யவேண்டாம் என்றும் கிரையம் செய்துகொடுக்க காலஅவகாசம் கேட்டதால்தான், வாதி வழக்கு தாக்கல் செய்யாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு, அந்த ஊரில் நான் இல்லை என்றாலும் ஊரை விட்டு வேறு எங்கோ சென்றுவிட்டேன் என்றாலும் வாதி என்னை பல இடங்கில் தேடிபார்த்தும், நான் எங்கு இருக்கிறேன் என்று வாதி தேடிவந்தார் என்றாலும் சரியல்ல. நான் மீண்டும் ஊருக்கு வந்தபிறகு, வாதி, மீண்டும் ஒரு சட்ட அறிவிப்பை கடந்த 03.05.2013 அன்று எனக்கு அனுப்பினார் என்றாலும் அதை நான் பெற்றுக்கொண்டேன் என்றாலும் வக்கீல் நோட்டீஸ் வந்தது அதை நான் வாங்கிக்கொண்டேன், பதில் எதுவும் கொடுக்கவில்லை. இந்த சட்ட அறிவிப்பிலும் ரூ.10,000/–யை பெற்றுக்கொண்டு கிரையம் செய்துகொடுக்கவேண்டும் என்றும் எங்கே வரவேண்டும், எப்பொழுது வரவேண்டும் என்ற விவரத்தையும் இந்த அறிவிப்பில் வாதி, சொல்லிதான் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றாலும் எனக்கு தெரியாது.

13. நான் அழைப்பாணை பெற்றுக்கொண்டு, இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் எனக்கு எதிராக ஒருதலைப்பச்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தீர்பாணையின் அடிப்படையில் எனக்கு எதிராக நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் இந்நிலையில் நான் எனது எதிர்வழக்குரையில் வழக்கு நடைபெற்றதே எனக்கு தெரியாது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றாலும் உண்மையில் நான், அழைப்பாணை பெற்றுக்கொண்டு, வழக்கில் முன்னிலையாகவில்லை என்றாலும், தவறான சங்கதிகளை நான் எனது எதிர்வழக்குரையில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

14. நான், என் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால்

தெரியாது. நான், மூன்றாவதாக அனுப்பிய சட்ட அறிவிப்பையும் பெற்றுக்கொண்டு, கிரையத்தை ஏற்படுத்திக்கொடுக்க முன்வராததால் வாதி, எனக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான், தாவா சொத்தை கிரையம் செய்துகொடுக்க முன்தொகையாக ரூ.1,00,000/–யை பெற்றுக்கொண்டு கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றாலும், அதன்படி நான் மீதித்தொகையான ரூ.10,000/–யை பெற்றுக்கொண்டு, தாவா சொத்தை நான், கிரையம் செய்துகொடுக்க கடமைபட்டுள்ளேன் என்றாலும், தாவாப்படி தீர்ப்பாகவேண்டுமென்றாலும் சரியல்ல.

வேண்டுகோள் ஏற்கட்டபட்டு காலஅவகாசம் வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம் 1.00 P.M

Taken down before me in open court, read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.